www.Padasalai.Net www.CBSEtips.in

## மகிழ்ந்து செய்வேன்

**1** பொருத்தமான எழுத்தை எழுதி தொடரை நிரப்புக.

குளத்தில் இருப்பது ...... று

தட்டில் இருப்பது ...... று

**2** பொருத்தமான ஒலிமரபை எழுதுக.

மயில் ____________________

அ) கூவும் ஆ) பேசும்

இ) அகவும் ஈ) பிளிறும்

அ ஆ இ ஈ

**3** வெளிச்சம் – இச்சொல்லைக் குறிக்காத சொல்

அ) ஒளி ஆ) விளக்கு

இ) அகல் ஈ) இருள்

அ ஆ இ ஈ

**4** மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது ____________________

அ) நெருப்பு ஆ) கடல்

இ) பூமி ஈ) நிலா

அ ஆ இ ஈ

**5** **கனி** என்பதன் பொருள்

அ) கழை ஆ) மூங்கில்

இ) பழம் ஈ) கிழங்கு

அ ஆ இ ஈ

**6** வசந்தி, தேர்ந்தெடுத்துப் படித்துச் சிரித்தாள் – இத்தொடரில் உள்ள எழுவாய் ____________________

அ) வசந்தி ஆ) படித்து

இ) சிரித்தாள் ஈ) தேர்ந்தெடுத்து

அ ஆ இ ஈ



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 84 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:10

www.Padasalai.Net www.CBSEtips.in

## 7 பொருத்தமான இளமைப் பெயரைத் தேர்ந்தெடுக்க.

யானை, தன் ______________________ உடன் நடந்து சென்றது.

அ) பறழ் ஆ) குஞ்சு

இ) பிள்ளை ஈ) கன்று

அ ஆ இ ஈ

## 8 தொடருக்கு ஏற்ற வினாவைத் தேர்ந்தெடுக்க.

நான் நாளை வருவேன்

அ) நேற்று யார் வந்தார்? ஆ) நீ எப்போது வந்தாய்?

இ) நீ எப்போது வருவாய்? ஈ) அப்பா எப்போது வந்தார்?

அ ஆ இ ஈ

## 9 தொடரில் உள்ள வினைச்சொல்லைத் தேர்ந்தெடுக்க.

தாத்தா படித்த கதையைச் சொன்னார்.

அ) கதையை ஆ) சொன்னார்

இ) கதை ஈ) தாத்தா

அ ஆ இ ஈ

## 10 வேறுபட்ட சொல் தொகுப்பு எது?

அ) பாடினாள், குதித்தாள், ஓடினாள்

ஆ) குகன், கவின், கண்ணன்

இ) ஓடி, எழிலன், கண்

ஈ) யாழினி, காமினி, மேதினி

அ ஆ இ ஈ

## 11 மான் துள்ளி ஓடியது. இத்தொடரில் வினைச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

அ) மான், துள்ளி ஆ) ஓடின

இ) ஓடியது ஈ) ஏதுமில்லை

அ ஆ இ ஈ



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 85 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:10

www.Padasalai.Net www.CBSEtips.in

**12** மேடையில் நடனம் ஆடியது ___________?



அ) யார்? ஆ) யாவை?

இ) என்ன? ஈ) எத்தனை?

அ ஆ இ ஈ

**13** படத்தைப் பார்த்துச் சரியான தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.



அ) நாய் விளையாடிக் கொண்டிருக்கிறது.

ஆ) சிறுவன் புத்தகம் படிக்கிறான்

இ) சிறுமி நாயுடன் விளையாடுகிறாள்

ஈ) சிறுமி புத்தகம் படிக்கிறாள்

அ ஆ இ ஈ

**14** சிறுமி அண்ணனிடம் என்ன கூறியிருப்பாள்?



அ) நாய்க்குட்டிக்கு உணவு அளிக்க வேண்டும்.

ஆ) செடிக்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும்.

இ) தம்பிக்குப் பந்து வாங்க வேண்டும்.

ஈ) பூப்பறிக்க வேண்டும்.

அ ஆ இ ஈ



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 86 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:12

**15** பிழையான தொடரைக் கண்டறிக

அ) கண்ணன் கூடை முடைந்தான்

ஆ) மலர்விழி பூப்பறித்தாள்

இ) இனியன் ஆடை செய்தான்

ஈ) கோகிலா முறுக்கு தின்றாள்

அ ஆ இ ஈ

**16** விடுப்பு விண்ணப்பத்தில் அனுப்புநர் பகுதியில் வரிசையாக இடம்பெறுபவை

அ) ஊர், பிரிவு, வகுப்பு, மாணவரின் பெயர், பள்ளி

ஆ) பிரிவு, வகுப்பு, மாணவரின் பெயர், ஊர்

இ) வகுப்பு, ஊர், மாணவர் பெயர், பிரிவு

ஈ) மாணவர் பெயர், வகுப்பு, பிரிவு, பள்ளி, ஊர்

அ ஆ இ ஈ

**17** தேர்ந்தெடுத்து நிரப்புக.

வயலில் தேவையற்று வளர்வது ____________ ளை

ஏர்பூட்டி உழ உதவுவது ____________ ளை

அ) கலை, களை ஆ) கழை, களை

இ) களை, காளை ஈ) கலை, கழை

அ ஆ இ ஈ

**18** குதிரை வேகமாக ஓடியது. இத்தொடரில் வினைச்சொல் எது?

அ) குதிரை ஆ) வேகமாக

இ) ஓடின ஈ) ஓடியது

அ ஆ இ ஈ

www.Padasalai.Net www.CBSEtips.in

19 செழியன் வாழ்க வாழ்க என வாழ்த்தினான். இத்தொடரில் உள்ள அடுக்குத் தொடரை எடுத்து எழுதுக.

அ) செழியன் ஆ) வாழ்க வாழ்க

இ) வாழ்க ஈ) வாழ்த்தினான்

அ ஆ இ ஈ
○ ○ ○ ○

20 மகிழினி அழகாக நடனம் ஆடினாள். இத்தொடரில் எழுவாய் எது?

அ) நடனம் ஆ) அழகாக

இ) மகிழினி ஈ) ஆடினாள்

அ ஆ இ ஈ
○ ○ ○ ○

21 தொலைக்காட்சி – சொல்லிலிருந்து புதிய சொற்களை உருவாக்குக.

______________________ ______________________

______________________ ______________________

______________________ ______________________


22 சொற்கோபுரம் அமைக்க.

1. முக்கனிகளுள் ஒன்று

2. அறிவு வேறு சொல்

3. மழை பொழிய ____________ வளர்ப்போம்

4. வெண்மை நிற வாசனை மலர்



5. நாம் கவலைகள் இன்றி ----------- ஆக இருக்க வேண்டும்



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 88 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:12

www.Padasalai.Net www.CBSEtips.in

**23** **பழச்சாறு தயாரிப்பதற்கான குறிப்புகளை வரிசைப்படுத்துக.**

இரண்டு குவளை தண்ணீர் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

எலுமிச்சையை இரண்டு துண்டுகளாக வெட்டிக்கொள்ள வேண்டும்.

எல்லாம் சேர்த்து நன்றாகக் கலக்கவேண்டும்.

ஒரு எலுமிச்சம்பழத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

எலுமிச்சம்பழத்தைப் பிழிந்துகொள்ள வேண்டும்.

சுவையான எலுமிச்சை பழச்சாறு தயார்.

தேன் அல்லது நாட்டுச்சர்க்கரை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

1.

2.

3.

4.

5.

6.

7.



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 89 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:12

## 24 விளம்பரத்தைப் பார்த்து வினாக்களுக்கு விடையளிக்க.




நூலின் பெயர்: தாத்தாவுக்குத் தாத்தா
ஆசிரியர் : உதயசங்கர், விலை: ரூ. 35/-

கரப்பான்பூச்சி என்றால் சிலருக்குப் பயம் இருக்கும். பாய்ந்து சென்று அதை அடிக்கவும் செய்வீர்கள். அவர்கள் எல்லாம் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது. மீனா என்ற சிறுமிக்கு எப்படி கரப்பான்பூச்சி பற்றிய பயம் போகிறது என்பதே இந்தக் கதை. கூடுதலாக வரலாற்றுத் தகவல்கள் உண்டு.

மேற்கண்ட நூலை வெளியிட்டது:
**தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்**
எண்: 68, ஈ.வே.கி. சம்பத் மாளிகை, கல்லூரிச் சாலை,
டி.பி.ஐ. வளாகம், நுங்கம்பாக்கம், சென்னை – 600 006.

1. நூல் ஆசிரியரின் பெயர் என்ன?

2. மீனாவுக்கு எதைக் கண்டால் பயமாக இருந்தது?

3. கரப்பான்பூச்சியைக் கண்டு நீ பயம் கொள்வாயா?

4. உன்னிடம் இருபத்தைந்து ரூபாய் உள்ளது. இந்தப் புத்தகத்தை உன்னால் வாங்க முடியுமா? ஏன்?



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 90 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:13

www.Padasalai.Net www.CBSEtips.in

## 25 பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தமிழரசி தோட்டத்தில் முளைத்த புற்களை வெட்டினாள். மண்வெட்டியால் சிறுசிறு குழிகளைத் தோண்டினாள். மல்லிகைச்செடிகளை நட்டாள். செடிகள் செழிக்க உரம் இட்டாள். எல்லாப் பூச்செடிகளுக்கும் நீர் ஊற்றினாள். மல்லிகைச் செடிகள் பூத்துக்குலுங்கின. தமிழரசி பூக்களைப் பார்த்து மகிழ்ந்தாள். நண்பர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்டாள். மேலும் சில வண்ணப் பூச்செடிகளையும் பழமரங்களையும் நடவேண்டும் என நினைத்தாள். நாம் அவளுக்கு உதவுவோமா?

1) தோட்டத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்வதற்குத் தமிழரசி என்ன செய்தாள்?

2) தமிழரசி தோட்டத்தில் மலர்ந்த மலரின் நிறம் என்ன?

3) தமிழரசி மகிழ்ச்சியை யாருடன் பகிர்ந்து கொண்டாள்?

4) பத்தியில் அமைந்துள்ள இரண்டு வினைச்சொற்களை எழுதுக.

5) தோட்டத்தில் எவற்றை நடலாம் எனத் தமிழரசிக்குக் கூறுவீர்கள்?



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 91 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:13

www.Padasalai.Net www.CBSEtips.in

## 26 பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

மூன்று நாள்கள் மலை ஏற்றப் பயிற்சி தொடங்கியது. ஆசிரியரும் பத்துமாணவர்களும் கிளம்பத் தயாரானார்கள். தேவையான பொருள்களை ஆசிரியர் பத்து மூட்டைகளாகக் கட்டிவைத்தார். ஒவ்வொரு மூட்டையிலும் என்ன இருக்கிறது என்று குறித்து வைத்தார். ஒரு மூட்டை மட்டும் மிகவும் பெரியதாக இருந்தது. ஆசிரியர் மாணவர்களிடம் ஆளுக்கு ஒரு மூட்டையை எடுத்துக்கொள்ளும்படி கூறினார். பலரும் விரைந்து சென்று சிறிய சிறிய மூட்டைகளை எடுத்துக்கொண்டனர். நிலவன் மூட்டைகளைப் பார்த்தான். மிகவும் பெரிதாக இருந்த மூட்டையை எடுத்துக்கொண்டான். அனைவரும் அவனைப் பார்த்துச் சிரித்தனர். ஒவ்வொரு நாளும் நிலவனின் மூட்டை குறைந்துகொண்டே இருந்தது. மூன்றாம் நாள், மூட்டையே இல்லாமல் போனது. மாணவர் அனைவரும் நிலவனின் அறிவுத்திறனைப் பாராட்டினர்.

1.ஆசிரியரும் மாணவர்களும் எங்கு கிளம்பினார்கள்?

2.ஆசிரியர், எதை மூட்டைகளாகக் கட்டி வைத்தார்?

3. மலையேற்ற பயிற்சி எத்தனை நாள் நடைபெற்றது?

4. மாணவர்கள் சிறிய மூட்டைகளை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்?

5. நிலவன் கொண்டு சென்ற மூட்டை என்னவாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?



EE_Tamil_5th_WB_Term 1_Unit 10.indd 92 Kindly send me your study materials to padasalai.net@gmail.com 17-05-2023 12:04:13